TAMIL NADU POLICE
INTEGRATED INVESTIGATION FORM-I
8075277

# FIRST INFORMATION REPORT
## முதல் தகவல் அறிக்கை
(Under Section 154 Cr.P.C.)
(கு.ந.வி.தொ.பிரிவு 154 இன் கீழ்)

C

1. District மாவட்டம்: Kanyakumari | PS காவல்நிலையம்: Vigilance and Anti Corruption | Year ஆண்டு: 2021 | FIR No முதஅ எண்: 03/2021 | Date நாள்: 15.04.2021

2. (i) Act சட்டம்: Sections பிரிவுகள்:

(ii) Act சட்டம்: PC Act 1988 (as amended in) Act 16 of 2018 Sections பிரிவுகள்: 7 (a)

(iii) Act சட்டம்: Sections பிரிவுகள்:

(iv) Other Acts & Sections பிற சட்டங்களும், பிரிவுகளும் :

3. (a) Occurrence of Offence Day : குற்ற நிகழ்வு நாள்
Date from : நாள் முதல் 12.04.2021 16.00 hrs
Date to : நாள் வரை

Time Period : நேர அளவு
Time from : நேரம் முதல்
Time to : நேரம் வரை

(b) Information Received at PS. Date : காவல் நிலையத்திற்கு தகவல் கிடைத்த நாள் 15.04.2021
Time : நேரம் 09.00 hrs

(c) General Diary Reference : Entry No(s) பொது நாட்குறிப்பில் பதிவு விவரம் எண்
Time : நேரம்

4. Type of Information : Written/ Oral : தகவலின் வகை : எழுத்து மூலம் / வாய் மொழியாக

5. Place of Occurrence (a) Direction and Distance from PS: Written
குற்ற நிகழ்விடம் (அ) காவல்நிலையத்திலிருந்து எவ்வளவு தூரமும், எத்திசையும்

Beat Number : முறைக் காவல் எண்
(b) Address : முகவரி
Sub Registrar Office, Ganapathipuram. 7 Km South West

(c) In case outside limit of this Police Station, then the Name of P.S : District :
இக்காவல் நிலைய எல்லைக்கப்பால் நடந்து இருக்குமாயின், அந்நிலையில் அந்த கா.நி.பெயர் மாவட்டம்

6. Complainant /Informant (a) Name : குற்றமுறையீட்டாளர்/ தகவல் தந்தவர் பெயர் I.KRISHNA JOTHI
(b) Father's/ Husband's Name தந்தை / கணவர் பெயர் Tr.IYYANADIYAR

(c) Date / Year of Birth : நாள் / பிறந்த ஆண்டு 02.06.1974
(d) Nationality : நாட்டினம் INDIAN
(e) Passport No : வெளிநாட்டு கடவுச்சீட்டு எண்

Date of Issue : வழங்கப்பட்ட நாள்
Place of Issue : வழங்கப்பட்ட இடம்

(f) Occupation : தொழில் Business.
(g) Address : முகவரி No.20/58, Gayathri Bhavan, Melakkattuvilai Manikkatti Pottal P.O

7. Details of Known/Suspected/Unknown accused with full particulars (Attach separate sheet if necessary)
தெரிந்த / ஐயப்பாட்டிற்குறிய / தெரியாத குற்றஞ்சாட்டப்பட்டவரின் முழுமையான விவரங்கள் (தேவையெனில் தனித்தாள் இணைக்கவும்)

Tr.Sasi, Sub Registrar, Sub Registrar Office, Ganapathipuram, Kanyakumari District.

8. Reasons for delay in reporting by the complainant / Informant:
குற்றமுறையீட்டாளரால் / தகவல் கொடுப்பவரால் முறையிட்டதில் தகவல் கொடுப்பதில் தாமதம்

No delay.

* GCP-240-34(Type-2) 90,000 Cps.-21.3.16(HCL-12)

9. Particulars of properties stolen / involved (Attach separate sheet if necessary)
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் விவரம் (தேவையெனில் தனித் தாளில் இணைக்கவும்)

Not arise

10. Total value of properties stolen / involved :
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் மொத்த மதிப்பு

11. Inquest Report / Un-natural death Case No. if any:
பிண விசாரணை அறிக்கை / இயற்கைக்கு மாறான இறப்பு எண் ஏதேனும் இருந்தால்

12. FIR Contents (Attach separate sheet, if required) :
முதல் தகவல் அறிக்கையின் சுருக்கம். (தேவையெனில் தனித்தாளில் இணைக்கவும்)

சமர்ப்பிக்கிறேன்: இன்று 15.04.2021ம் தேதி காலை 09.00 மணிக்கு நான் நாகர்கோவில் உள்ள ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு அலுவலகத்தில் இருந்தபோது திரு.ஐ.கிருஷ்ண ஜோதி என்பவர் நிலையம் வந்து ஆஜராகி கொடுத்த புகார் மனுவைப்பெற்று புகாரில் குறிப்பிட்டிருந்த அலுவலரின் நடத்தை பற்றி ரகசிய விசாரணை செய்தபின், மேற்படி தகவலை ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புத்துறை தென்சரக காவல் கண்காணிப்பாளர் அவர்களுக்கு தெரிவித்து அனுமதிபெற்று காலை 10.00 மணிக்கு நாகர்கோவில் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு குற்ற எண் 03/2021 u/s 7(a) of PC Act, 1988 (amended in 16/2018)–ன்படி வழக்கு பதிவு செய்கிறேன். புகார் மனு பின்வருமாறு. அனுப்புனர் ஐ.கிருஷ்ண ஜோதி, த/பெ. ஐயனடியார், 20/58 - காயத்ரி பவன், மேலக்காட்டு விளை, மணிக்கட்டி பொட்டல் (P.O), கன்யாகுமரி மாவட்டம். பெறுனர் உயர்திரு காவல் ஆய்வாளர் அவர்கள், லஞ்ச ஒழிப்பு துறை, நாகர்கோவில். ஐயா, எனக்கு சொந்த ஊர் கன்யாகுமரி மாவட்டம், மேலக்காட்டுவிளை ஆகும். நான் தாமரை குட்டி விளையில் மீன்வலை கம்பெனி வைத்துள்ளேன், மேலும் நிலம் வாங்கி விற்பனை செய்யும் தொழிலும் செய்து

13. Action taken : Since the above report reveals commission of offence(s) u/s as mentioned at item No.2 registered the case and took up the investigation / directed ..................... Rank ..................... to take up the Investigation / Refused Investigation / transferred to PS..............................................on point of jurisdiction.

எடுக்கப்பட்ட நடவடிக்கை : மேலே குற்ற முறையீட்டில் உள்ளவை பிரிவு 2ல் கூறப்பட்ட சட்ட பிரிவுப்படியான குற்றமாக வழக்கு பதிவு செய்து புலனாய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது / பணிக்கப்படுதல் ............................ பதவி ..................... நிலை பணியாளரின் புலனாய்வுக்கு எடுத்துகொள்ள பணிக்கப்பட்டது / மறுக்கப்பட்டு எல்லையைக் கருதி புலனாய்வுக்கு ............................................ காவல் நிலையத்திற்கு மாற்றப்படுகிறது.

FIR read over to the Complainant / Informant, admitted to be correctly recorded and a copy given to the Complainant / Informant free of cost.
மு.த.அ. குற்றமுறையீட்டாளருக்கு / தகவல் தந்தவருக்கு படித்துக்காட்டி, அது சரியாக எழுதப்பட்டு இருப்பதாக ஏற்றுக் கொள்ளப்பட்டு, அதன் படி நகல் ஒன்று இலவசமாக கொடுக்கப்பட்டது.

14. Signature / Thumb Impression of the Complainant / Informant
குற்றமுறையீட்டாளர் / தகவல் கொடுப்பவரின் ஒப்பம் /
பெருவிரல் இரேகைப் பதிவு

S. [signature] 15/04/2021
Signature of the Officer in-charge, Police Station
காவல் நிலைய பொறுப்பு அலுவலரின் ஒப்பம்

15. Date & Time of despatch to the court:
நீதிமன்றத்திற்கு அனுப்பப்பட்ட நாளும், நேரமும்
15/04/2021 at 11.30hrs

Name: பெயர் S. John Benjamin
Rank: நிலை Inspector No. எண் ..........

வருகிறேன். நாகர்கோவில் கோட்டார் செட்டித்தெரு தெய்வத்திரு.சுப்பையா பிள்ளை அவர்கள் மகன்கள் திரு.பொன்னப்பதாஸ் மற்றும் அவரது தம்பி திரு.வெங்கடேஷ் ஆகியோர் எங்க ஊர் மேலக்காட்டு விளையில் ஸ்ரீசாயி என்ற பெயரில் மீன்வலை கம்பெனி வைத்து நடத்தி வருகிறார்கள். அதன் நிமித்தம் அவர்களை எனக்கு நன்றாக தெரியும். நாங்கள் நண்பர்களாக பழகி வருகிறோம். இந்நிலையில் அவர்களது குடும்ப சொத்தான அகஸ்தீஸ்வரம் தாலுகா நீண்டகரை -B வில்லேஜ்புது சர்வே எண் 442-ல் உள்பட்ட 4 ஏக்கர் 64 சென்ட் தென்னந்தோப்பில் அவர்களுக்கு பாத்தியப்பட்ட 3 ஏக்கர் 64 சென்ட் இடத்தை பிரித்து விற்பனை செய்யவேண்டும். வாங்குவதற்கு தகுந்த நபர்கள் இருந்தால் பார்த்து சொல்லுங்கள் என்றும் கூறினார்கள். அதன்படி நான் அந்த இடத்தில் 53 சென்ட் இடத்தை விலைக்கு வாங்குவதற்கு 1. திருமதி.ராஜ புனிதா, W/o எட்வர்டு ராஜ், முட்டம் 2. ராஜ ஸ்மிதா, D/o எட்வர்டு ராஜ், முட்டம் 3. திருமதி.ராஜ நமிதா, W/o ஆன்றன் எடல் பிரேம், அழிக்கால் என்ற நபர்களிடம் ரூ.7,18,500/-க்கு விலை பேசி அந்த விலைக்கு நிலத்தின் சொந்தக்காரர்கள் சம்மதித்ததன் பேரில் அதுசம்மந்தமாக பத்திரப்பதிவு செய்ய பத்திரம் டிராப்ட் எழுதி கணபதிபுரம் பத்திரபதிவு அலுவலகத்திற்கு சென்று அங்கு சார்பதிவாளர் திரு.சசி அவர்களை 12.04.2021-ம் தேதி மாலை சுமார் 4 மணிக்கு சந்தித்து டிராப்டை கொடுத்து, ஐயா இந்த பத்திரம் பதிவு செய்ய வேண்டும், ஏற்பாடு செய்து தாருங்கள் என்று கேட்டேன். அதற்கு அவர் பத்திரத்தை பார்வையிட்டு சில மாறுதல்கள் செய்து தர வேண்டும் என்று அதனை பதிவு செய்வதற்கு ரூ.50,000/- தனக்கு தனியாக தர வேண்டும் என்றும் கூறினார். அதற்கு நான் அவருக்கு லஞ்சமாக பணம் கொடுக்க விருப்பம் இல்லாமல், ஐயா நிலத்துக்கு சொந்தகாரர்களிடம் கேட்டு தான் சொல்ல முடியும் என்று கூறினேன். அதற்கு அவர் யாரிடமும் கேட்டுக்கொள்ளுங்கள், எனக்கு ரூ.50,000/- தந்தால் தான் பத்திரம் பதிவு செய்ய முடியும் என்று கண்டிப்பாக கூறிவிட்டார். நானும் லஞ்சமாக பணம் கொடுப்பதற்கு விருப்பம் இல்லாமல் அப்போதைக்கு சரி என்று சொல்லிவிட்டு வந்துவிட்டேன். பின்பு நிலத்துக்கு சொந்தக்காரர்களான திரு.பொன்னப்பதாஸ் மற்றும் திரு.வெங்கடேஷ் ஆகியோரிடம் சார்பதிவாளர் பத்திரம் பதிவு செய்ய ரூ.50,000/- லஞ்சமாக கேட்ட விபரத்தை கூறினேன். அவர்களும் பத்திரம் பதிவு செய்ய லஞ்சமாக பணம் கொடுக்க கூடாது என்றும் அதுசம்மந்தமாக நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும், புகார் கொடுத்து நடவடிக்கை எடுப்பதற்கு தங்களால் அலைய முடியாது என்றும். மேலும் பத்திரப்பதிவு காரியங்களில் அவர்களுக்கு அனுபவம் இல்லாததாலும். அதற்காக அவர்கள் தொழிலை விட்டுவிட்டு அலையமுடியாது என்பதாலும். மேலும் நான் நிலம் வாங்கி விற்கும் தொழிலில் ஈடுபட்டு வருவதாலும் அதுசம்மந்தமான பத்திரப்பதிவு ஏற்பாடுகளை அவர்களுக்கு பதிலாக என்னை கவனித்து கொள்ளுமாறும் சொல்லி எனக்கு 12.04.2021-ம் தேதி நாகர்கோவில் அட்வகேட் திரு.சிரில்ராஜ் என்ற நோட்டரி பப்ளிக் முன்னிலையில் எனக்கு ஒரு அதிகார பத்திரம் எழுதி தந்தார்கள். எனவே மேற்படி இடத்தை பத்திரப்பதிவு செய்வது சம்மந்தப்பட்ட காரியங்களுக்கு எனக்கு அங்கீகாரம் அளித்துள்ளதால்

மேற்படி இடத்தை பத்திரப்பதிவு செய்ய என்னிடம் லஞ்சமாக ரூ.50,000/- கேட்ட கணபதிபுரம் சார்பதிவாளர் திரு.சசி அவர்கள் மீது நடவடிக்கை எடுக்கவேண்டி இந்த புகார்மனுவையும் அதனுடன் மேற்படி இடத்தை பத்திரப்பதிவு செய்ய எழுதப்பட்ட டிராப்டையும், எனக்கு இந்த பத்திரப்பதிவு சம்மந்தமாக நடவடிக்கை எடுக்க அங்கீகாரம் அளித்து கொடுக்கப்பட்ட அங்கீகார பத்திரத்தையும் தங்களிடம் ஒப்படைக்கிறேன். எனவே இந்த புகார் மனு மீது தகுந்த நடவடிக்கை எடுக்கும்படி தாழ்மையுடன் கேட்டுக்கொள்கிறேன். இப்படிக்கு, ஒம்.(ஐ.கிருஷ்ண ஜோதி) 15.04.2021.

Sir, Received the complaint today on 15.04.2021 at 09.00 hrs and registered a case in Nagercoil V&AC Cr.No.03/2021 u/s 7(a) of PC Act, 1988 (amended in 16/2018) at 10.00 hrs after making verification and getting oral permission from SP SR, Chennai sd.S.JOHN BENJAMIN, 15.04.2021, Inspector, V&AC, Nagercoil.

இந்த வழக்கின் அசல் FIR மற்றும் அசல் புகார் மனுவுடன் இணைத்து கனம் Chief Judicial Magistrate cum Special Judge Court, நாகர்கோவில் அவர்களுக்கு அனுப்பியும், இதர நகலை உயரதிகாரிகளுக்கும் அனுப்பியும் வைத்தேன். ஒரு நகலை விசாரணைக்காக நான் எடுத்துக்கொண்டேன்.

S. [signature] 15/04/2021
(S. John Benjamin)
Inspector V&AC
Nagercoil.